**செய்தி வெளியீடு எண்:391** **நாள்: 24.06.2017**

**செய்தி வெளியீடு**

எழுதுபொருள் அச்சுத் துறையானது மாநிலம் முழுவதிலும் உள்ள அரசுத் துறைகளின் பயன்பாட்டிற்குத் தேவைப்படும் நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள், பதிவேடுகள், துறை சார்ந்த நடைமுறை நூல்கள், பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள், தேர்தல் படிவங்கள், தேசிய மக்கள் தொகை பதிவேடுகள் ஆகியவற்றை அச்சிட்டு வழங்கி வருவதுடன், அரசு அச்சகங்களுக்கு தேவையான புதிய நவீன இயந்திரங்களை கொள்முதல் செய்தல், அரசு அச்சகங்களுக்கு தேவையான உதிரிபாகங்கள் மற்றும் காகிதங்களை கொள்முதல் செய்தல் ஆகிய பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

எழுதுபொருள் அச்சுத் துறையில் காலியாக உள்ள மஸ்தூர் பணியிடங்களை நிரப்பிடும் வகையில், நெடுஞ்சாலைத் துறை, தொழிலாளர் நலத்துறை மற்றும் எழுதுபொருள் அச்சுத் துறை ஆகிய துறைகளில் பணியாற்றி, பணியின்போது உயிரிழந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களில் கருணை அடிப்படையில் பணி கோரி முதுநிலை வரிசையில் உள்ள 50 நபர்களுக்கு மஸ்தூர் பணியிடத்திற்கான பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (24.6.2017) தலைமைச் செயலகத்தில், 7 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு.இரா.வெங்கடேசன், இ.ஆ.ப., எழுதுபொருள் அச்சுத் துறை இயக்குநர் திரு.ஜெ. ஜெயகாந்தன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 24.6.2017**